எங்கெங்கே எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு இருக்கிறதோ அங்கெல்லாம் எக்ஸ்ரே யூனிட் இருக்கவேண்டும்; தேவையான எக்ஸ்ரே பிலிமும் ஸ்டாக் இருக்க வேண்டும். அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ஒரு எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவை நாம் ஏற்படுத்த வேண்டுமென்றால் அங்கே எக்ஸ்ரே இருக்க வேண்டும்; எக்ஸ்ரே பிலிம் இருக்க வேண்டும்; ஆர்தோபீடிக் ஸ்பெஷலிஸ்ட் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றாகும்; அதன் இலக்கணம் அது. அந்த அடிப்படையில் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பராமரிப்புத் திறமையைப் பொறுத்திருக்கிறது. அதுவும் முன்பு இருந்ததைவிட இப்போது சீர்பட்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். நாம் பல இடங்களில் உள்ளே சென்று பார்த்திருக்கிறோம் தஞ்சாவூரில் நடைபெற்றது அவர்களுக்கும் தெரியும். அந்த வகையில் மிகத் தீவிரமாக நாம் செயல்பட்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் பல்வேறு அரசு போக்குவரத்துக் கழகங்களின் கீழ் இயங்கும் பேருந்துகள்.

*வினா எண். 155 திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இயங்கும் பல்வேறு அரசு போக்குவரத்து கழகங்களின் கீழ் இயங்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவைகளில் சென்ற இரண்டு ஆண்டுகளாக விடப்பட்ட புதிய பேருந்துகள் எத்தனை?

(இ) நகர்புறத்தில் எத்தனை? வெளியூரில் எத்தனை?

(ஈ) கிராமப்புறங்களில் புதிதாக விடப்பட்ட நகர்புற வழித்தடங்கள் பேருந்துகள் எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 31-12-1982 முடிய சுமார் 8, 116 பேருந்துகள் தமிழ்நாட்டில் இயங்கும் பல்வேறு அரசு போக்குவரத்துக் கழகங்களின்கீழ் இயக்கப்படுகின்றன.

(ஆ) இவற்றில் சென்ற இரண்டு ஆண்டுகளாக விடப்பட்ட புதிய பேருந்துகள் சுமார் 2,800 ஆகும்

1983 பிப்ரவரி 5]

(இ) நகர்புறத்தில் சுமார் 1745 பேருந்துகளும் வெளியூரில் சுமார் 1,055 பேருந்துகளும் விடப்பட்டன.

(ஈ) 481 பேருந்துகள் கிராமப்புறங்களில் புதிதாக தொடங்கியுள்ள நகர்புற வழித்தடங்களில் இயக்கப்பட்டன

பழனியிலிந்து பெங்களூருக்கு பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 156 திரு. என். பழனிவேல் மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பழனியிலிருந்து பெங்களூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துகழகத்தின் பேருந்து விடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இத்தடம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் அமைந்திருப்பதால் இம்மாநில அரசுகளின் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இத்தடத்தை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, பழநியிலிருந்து பெங்களூருக்கு பேருந்து விட கர்நாடக அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டம் குடியாத்தத்திலிருந்து ஓசூருக்கு ஒரு பேருந்து செல்கிறது, அதை பெங்களூர் வரை நீட்டிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே. அதற்கும் இதைப்போன்று ஒரு ஒப்பந்தம் தேவை. அதற்கு ஒப்பந்ததேதி அறிவிக்கப்படும் போது இதையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜி. மூர்த்தி: தலைவரவர்களே. வேலூரிலிருந்து பெங்களூருக்கு இப்போது புதிதாக இரண்டு, மூன்று பேருந்துகளை அரசு விட்டுக்கொண்டிருக்கிறது. அவை பேரணாம்பட்டு வழியாக பெங்களூருக்குச் சென்றால் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் மிச்சப்படும். அதே நேரத்தில் அதிகமான பயணிகள் பேரணாம்பட்டிலிருந்து பெங்களூருக்கு செல்கிறார்கள். ஆகவே: பயணிகள் வசதியை முன்னிட்டு பேரணாம்பட்டு வழியாக அந்த பேருந்துகளைவிட அரசு ஏற்பாடு செய்யுமா?